People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

13.05.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 07.5.2011 முதல் 13.5.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**07-5-2011 முதல் 13-5-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 31 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 10 |
| 5. | வகுப்பறை வன்முறை | – |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 3 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 6 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 3 |
| 11. | குழந்தை திருமணம் | 2 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 7 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 3 |
| 17. | மணல் கொள்ளை | 5 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 1 |
| | மொத்தம் | 73 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-19
## 07.5.2011 முதல் 13.5.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1228. | 07.5.2011 | **மதுரை மாவட்டம்:** எல்.கொட்டாணிபட்டியைச் சேர்ந்த கருப்பசாமி மகள் லட்சுமி(21). அதே பகுதியைச் சேர்ந்த வடிவேல்(21). திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல். திருமணத்திற்கு மறுப்பு. லெட்சுமி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 1229. | 07.5.2011 | **சேலம் மாவட்டம்:** கரூரைச் சேர்ந்த நாகராஜ் புதிய நிறுவனம் தொடங்க கரூர் காலால் வரித்துறை அலுவலக சூப்பிரண்ட் சுப்பிரமணிய(42)னை அணுகினார். அவர் ரூபாய் 3 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக நாகராஜ் புகார். சுப்பிரமணியன் கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 1230. | 07.5.2011 | **மதுரை மாவட்டம்:** பொட்டப்பனையூரைச் சேர்ந்த அரவிந்தபாண்டியன் மனைவி சத்யா. இவர் அதே பகுதியில் வசிக்கும் செல்வி(40). இருவருக்கும் கொடுக்கல் வாங்கலில் தகராறு. சத்யா மீது செல்வி காவல் நிலையத்தில் புகார். கருப்பாயூரணி காவல் நிலையத்தில் காவலர்கள் சத்யாவை 3 நாட்களாக சட்டவிரோத காவலில் வைத்து விசாரணை செய்ததாகப; புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1231. | 07.5.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன்சத்திரம் மேற்கு தொடர்ச்சி மலை கண்ணனூரைச் சேர்ந்த முருகன். அதே பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன். இருவருக்கும் பாதை தொடர்பாக தகராறு. முருகன் வக்கீல் மணிவேல் மூலம் காவல் நிலையத்தில் புகார். காவலர்கள் முருகனை மட்டும் தனியாக விசாரணை செய்ய வக்கீல் மணிவேல் எதிர்ப்பு. ஏட்டு கருப்பையா வக்கீலை தாக்கிச் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1232. | 07.5.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி பாப்பம்பட்டியைச் சேர்ந்த ரவி மனைவி சிவமணி(32). கணவர் மற்றும் அவரது நண்பர்கள் செந்தில், பிரபு, சிவராஜ் ஆகியோர் சிவமணியை கடத்திச் சென்று பாலியல் செய்து கொலை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & கொலை | தினமலர் |
| 1233. | 07.5.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** டாக்டர் பாஸ்கரன் கடத்தி கொலை செய்யப்பட்டது தொடர்பாக கார்த்திகேயன், நண்பர்கள் உமர், சபீர், விவேக், முகிலன், சங்கர், துரைப்பாண்டி, மஞ்சுபார்கவி, ராஜ்குமார் மீது | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குற்றம் சாட்டப்பட்டு கோர்ட்டில் ஆஜார்படுத்த சென்றபோது எஸ்.ஐ மதனகலாவை கார்த்திகேயன் மிரட்டியதாக புகார். | | |
| 1234. | 07.5.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** மீனாட்சிபுரத்தில் வசிக்கும் பழனிவேலு மகள் சம்பூர்ண வள்ளி. அதே பகுதியைச் சேர்ந்த மாரியப்பன் சம்பூர்ண வள்ளி கையில் இருந்த செல்போனுக்கு ஆசைபட்டு கழுத்தை நெறித்துக் கொலை. மாரியப்பன் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தீக்கதிர் |
| 1235. | 07.5.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் ஸ்டீல் ரோலிங் மில்லில் வேலை செய்த ஒரிசாவைச் சேர்ந்த 14 வயதுக்குட்பட்ட 11 குழந்தை தொழிலாளர்கள் மீட்பு. | குழந்தைத் தொழிலாளர் மீட்பு | தீக்கதிர் |
| 1236. | 07.5.2011 | **கடலூர் மாவட்டம்:** உளுந்தூர்பேட்டையை அடுத்த ஆசனூர் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேசன் மகள் பவானி(7). விடுமுறைக்கு தாத்தா வீட்டிற்கு சென்ற பவானியை அதே பகுதியைச் சேர்ந்த செல்வராஜ்(49) கடத்தி பாலியல் பலாத்காரம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |
| 1237. | 08.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஊமச்சிகுளத்தை அடுத்துள்ள மங்சம்பட்டி இங்குள்ள கருப்பசாமி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை தனியார் அபகரிப்பு. நிலத்தை மீட்டுத்தருமாறு மஞ்சம்பட்டியில் இருந்து வெளியேறிய மக்கள் குடும்பத்துடன் கல்லுப்பட்டி மலையையொட்டிய பகுதியில் குடியேறினர். சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வந்த காவல்துறையினர், தலித் மக்களைச் தாக்கியச் சித்திரவதை. | தலித்துகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 1238. | 08.5.2011 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்டபட்ட புலியூர் ஊராட்சி எழுத்தர் முறைகேடு செய்ததாக புகார். கட்டப்பஞ்சாயத்து கூட்டம் போட்டு, ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககூடாது என்று ஊராட்சித் தலைவர் மலைச்சாமிக்கு நெருக்கடி தந்துள்ளனர். நெருக்கடி தாளாமல் மலைச்சாமி விஷம் குடித்துத் தற்கொலை. | தலித்துகள் மீதான வன்முறை & கட்டபஞ்சாயத்து & தற்கொலை | தீக்கதிர் |
| 1239. | 08.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஆண்டாள்புரத்தில் உள்ள தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியில் வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட காவல்துறை சார்பு ஆய்வாளர் செல்வம் குடிபோதையில் பணியில் ஈடுபட்டதாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 1240. | 08.5.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருவாடானை அருகே ஆதியூர் கிராமத்தைச் சேர்ந்த மாரிமுத்துவின் மனைவி பூச்சம்மாள்(50). | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதே பகுதியைச் சேர்ந்த ராஜேஷ் இருவருக்கும் நடந்த தகராறில் ஆத்திரமடைந்த ராஜேஷ் பூச்சம்மாளை உருட்டுக்கட்டையால் தாக்குதல். பூச்சம்மாள் புகார். | | |
| 1241. | 08.5.2011 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணி அருகே சொக்கநாதபுரத்தைச் சேர்ந்த அன்புராஜன் மகள் வெண்ணிலா(17)வை அதே பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் அவரது உறவினர்கள் சக்தி, சுதாகரன், இளங்கோவன், பஞ்சவர்ணம் ஆகியோர் கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 1242. | 08.5.2011 | **புதுவை மாநிலம்:** புதுவை காலாப்பட்டு கிழக்கு கடற்கரை சாலையில் ரசாயன தொழிற்சாலையில் காஸ்கசிவு ஏற்பட்டு சாலையை மூடக்கோரி நிர்வாகிகள் உத்தரவு. மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவை எதிர்த்து தொழிற்சாலை நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு. தொழிற்சாலையை இயக்க நீதிபதிகள் உத்தரவு தொழிற்சாலையை திறக்க எதிர்ப்பு தெரிவித்து ரேஷன் கார்டுகளை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது போலீஸ் தடியடி. 300 பேர் கைது. | போலீஸ் தடியடி & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1243. | 08.5.2011 | **பெரம்பலூர் மாவட்டம்:** குன்னம் தாலுகா, வசிஷ்டபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுப்ரமணியன் மகள் பரிமளா(15). அரியலூர் மாவட்டம் செந்துறை தாலுகா, சிவராமபுரம் கிராமத்தைச் சேர்ந்த வீரமுத்துவின் மகன் மோகன்(14). இருவருக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தில் விருப்பம் இல்லாத மாணவி தனக்கு கட்டாய திருமணம் செய்து வைத்ததாக பெற்றோர் மீது புகார். | குழந்தைத் திருமணம் | தினமலர் |
| 1244. | 08.5.2011 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் அருகே பிள்ளையார்பட்டியைச் சேர்ந்த கருப்பையா மகள் கருப்பாயி(21). சித்தாள் வேலைக்குச் சென்ற கருப்பாயியை கொத்தனார் சக்திவேல்(23) பாலியல். கர்ப்பிணியான கருப்பாயியை திருமணம் செய்ய மறுப்பு. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 1245. | 08.5.2011 | **தேனி மாவட்டம்:** கம்பம் அருகேயுள்ள சுருளிப்பட்டி வடக்குதெருவைச் சேர்ந்த பாலகிருஷ்ணன். மின் இணைப்பு வழங்க இளைநிலை பொறியாளர் இருளாண்டி, போர்மேன் ஜவகர், வயரிங் கான்ட்ராக்டர் விஸ்வநாதன். லஞ்சம் கேட்டதாக புகார். மூவரும் கைது. | லஞ்சம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1246. | 08.5.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தை அடுத்த வில்லூர் கிராமத்தில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலை தொடர்ந்து துப்பாக்கி சூடு. 60 பேர் கைது. வில்லூர் ஊராட்சி மன்ற தலைவர் சுப்புலெட்சுமியை அதே பகுதியைச் சேர்ந்த தங்கப்பாண்டி, தங்கமணி, மாரிமுத்து மூன்று பேரும் தன்னை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யமுயற்சிப்பதாக சுப்புலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1247. | 08.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கரும்பாலையைச் சேர்ந்த கணேசன் மகள் பரணி(27). வீட்டில் தனியாக இருந்த பரணி தீக்குளித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 1248. | 08.5.2011 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் அடுத்த கவால்பேட்டையைச் சேர்ந்த மோகன் மனைவி சாந்தி(27). சுவால்பேட்டை பகுதியைச் சேர்ந்த சிவானந்தத்திற்கும் சாந்திக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த சிவானந்தம் சாந்தியின் வலது கை விரலை கடித்துச் சித்திரவதை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1249. | 09.5.2011 | **அரியலூர் மாவட்டம்:** 15 வயதுடைய 10ம் வகுப்பு படிக்கும் மாணவி கீதா. பெற்றோர்கள் கீதாவுக்கு கட்டாயமாக திருமணம் செய்ய முயற்சி. | குழந்தைத் திருமணம். | டெக்கான் கிரானிக்கல் |
| 1250. | 09.5.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலகுண்டு அருகே மருதாநதி கிராமத்தைச் சேர்ந்த பழனிச்சாமியின் மகள் காளீஸ்வரி(7). ஒட்டன்சத்திரம் அருகே திருவிழாவிற்கு வந்த வெள்ளமடத்துப்பட்டியைச் சேர்ந்த கார்த்திக்(24) காளீஸ்வரியை பாலியல் செய்து கொலை. கார்த்திக் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |
| 1251. | 09.52011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** வாலாஜாபாத்தை அடுத்துள்ள பாவேரி கிராம பாலாற்றின் கரையோரம் கிராம மக்களின் எதிர்ப்பை மீறி மணல் எடுத்து வருவதாக மக்கள் புகார். | மணல் கொள்ளை | தீக்கதிர் |
| 1252. | 09.4.2011 | **சேலம் மாவட்டம்:** ஆத்தூரில் பருத்தி கொள்முதல் விலையை குறைத்ததைக் கண்டித்து தங்களுக்கு கூடுதல் விலை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விவசாயிகள் சாலை மறியல். காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 1253. | 09.5.2011 | **மதுரை மாவட்டம்:** கொடிமங்கலம் கீழமாத்துர், மேலமாத்தூர், மற்றும் தாராப்பட்டி வைகை ஆற்றுப்பகுதியில் மணல் கொள்ளை நடைபெறுவதாக பொதுமக்கள் புகார். | மணல் கொள்ளை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1254. | 09.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பங்கஜம் காலனியைச் சேர்ந்த காமராஜ் மனைவி மித்ரா(35). எஸ்.எஸ். காலனி சுரேந்திரன், பெரியசாமி நகர் ராஜேந்திரன், ஆவின் நகர் முரளி கிருஷ்ணன், மூவரும் மித்ராவை கேலி செய்ததாக புகார். மூவரும் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1255. | 09.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் அருகே உள்ள சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த குருசாமி மனைவி பஞ்சவர்ணம். வயிற்றில் நீர்கட்டியிருப்பதாக சாத்தூர் தனியார் மருத்துவமனையில் அனுமதி. ஆபரேசனுக்கு பின்பு மருத்துவர்களின் தவறான அறுவைசிகிச்சை. மதுரை நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு. | பெண்கள் மீதான வன்முறை & மருத்துவர்கள் அலட்சியம் | தினகரன் |
| 1256. | 09.5.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி அரூர் அருகே கூத்தாடிப்பட்டியைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் மனைவி நித்யா(22). திருமணமாகி ஒரு வருடம் ஆன நிலையில் கணவர் அடித்துத் துன்புறுத்தியதோடு பாலியல் தொந்தரவு கொடுப்பதாக நித்யா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1257. | 10.5.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தமிழ்நாட்டில் இருந்து கிருஷ்ணகிரி வழியாக கர்நாடக மாநிலத்திற்கு கடத்த முயன்ற 220 மூடை ரேசன் அரிசி பறிமுதல். லாரி ஓட்டுநர் பாலகிருஷ்ணன் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| 1258. | 10.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை எச் எம்எஸ் காலனியைச் சேர்ந்த ஹேமகிரி மனைவி கீர்த்திகா(33). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் துன்புறுத்துவதாக கீர்த்திகா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 1259. | 10.5.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையைச் சேர்ந்த துணை நடிகை கவிதா. திருவல்லிக்கேணியைச் சேர்ந்த வக்கீல் தமிழரசன்(40) கவிதாவை அழைத்துச் சென்று கத்தியால் குத்தி கொலை. கவிதா மரண வாக்குமூலம். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 1260. | 10.5.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை திருமயம் அடுத் பி.அழகாபுரி கிராமத்தில் சரவணன் வீட்டின் பின்புறம், அனுமதியின்றி இயக்கி வந்த பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் செல்வி(48), பிரபா(10) இருவரும் மரணம். பலர் படுகாயம். | பட்டாசு ஆலை விபத்து | தினமலர் |
| 1261. | 10.5.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஊத்தங்கரை அடுத்த சிங்காரப்பேட்டை கோடாலிவலசை பகுதியைச் சேர்ந்த சம்பத் மனைவி சுதா(29). குழந்தைகள் பெருமாள்(8) பிரியதர்சினி(4). | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருவரும் மன வளர்ச்சி இல்லாத குழந்தைகள். மனமுடைந்த சுதா இரு குழந்தைகளையும் கொலை செய்து தானும் தூக்கிட்டுத் தற்கொலை. | மீதான வன்முறை & தற்கொலை | |
| 1262. | 10.5.2011 | **சேலம் மாவட்டம்:** ஆத்தூர் அருகே கொத்தாம்பாடி கிராம ஊராட்சியில் போலி அடையாள அட்டையைப் பயன்படுத்தி, 40 லட்சம் ரூபாய் முறைகேடு செய்த ஊராட்சித் தலைவர் கலாவதி, துணைத்தலைவர் அஞ்சலை, இதற்கு உடந்தையாக இருந்த ஊராட்சி உதவியாளர் ஆசைதம்பி, மக்கள் நலப்பணியாளராக இருந்த மங்கையர்கரசி மற்றும் 11 பேரை சஸ்பென்ட் செய்ய சேலம் கலெக்டர் சந்திரகுமார் உத்தரவு. | லஞ்சம் | தினமலர் |
| 1263. | 11.5.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் முனிக்கோவில் அருகே வாகன சோதனையின் போது ஒரு லாரியில் கடத்தி வந்த 80 மூடை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி ஊழல் | தினமணி |
| 1264. | 11.5.2011 | **சென்னை மாவட்டம்:** சேலையூரை அடுத்த செம்பாக்கத்தைச் சேர்ந்த அப்பாராவ் மகள் அனுஷா(24) அதே பகுதியைச் சேர்ந்த வினோத்குமார்(22) இருவரும் காதலித்தனர். காதலுக்கு அனுஷாவின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததோடு அனுஷாவை வினோத்குமார் கடத்தியதாக பொய்யான வழக்கு பதிவு செய்து காவல்துறையினர் உதவியுடன் வினோத்குமார் கைது. | காவல் நிலையச் சித்திரவதை | ஜூனியர் விகடன் |
| 1265. | 11.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் மேலநாட்டம்பட்டியைச் சேர்ந்த பாண்டியராஜனின் கார் எதிரே வந்த வேன் மோதியதில் பாண்டியராஜன் மரணம். சம்பவ இடத்திற்குச் சென்ற எஸ்.ஐ., ராமசாமி பாண்டியராஜனிடம் இருந்த பணம் மற்றும் மொபைல்போனைத் திருடியதற்காக சஸ்பெண்ட். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1266. | 11.5.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் குருநாதன் கோவில் தெருவைச் சேர்ந்த கோவிந்தசாமி அவனியாபுரம் 2ம் எண் ரேசன் கடையில் முறைகேடு நடப்பதாக வில்லாபுரம் கூட்டறவு வங்கி அதிகாரியிடம் புகார். ஆத்திரமடைந்த ரேசன் கடை ஊழியர் பிச்சைப்பாண்டி, கண்ணன், கோனேரி மூவரும் கோவிந்தசாமியை தாக்கியதாக புகார். | ரேசன் அரிசி ஊழல் | தினமலர் |
| 1267. | 12.5.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூரைச் அடுத்த குரிசிலாப்பட்டு கிருஷ்ணா நகரைச் சேர்ந்த 9 வயது சிறுமி அதே பகுதியைச் சேர்ந்த நவீன்குமார்(23) பாலியல். மாணவியின் | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கர் (01.05.11 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றோர் புகார். நவீன்குமார் கைது. | | |
| 1268. | 12.5.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆரணி அடுத்த ராட்டிணமங்கலம் மின்வாரிய நகரில் வசிப்பவர் குமார்மனைவி ஜோதி(26). கணவன் கூடுதல் வரதட்சணைக் கேட்டு அடிக்கடி தகராறு செய்ததால் மனமுடைந்த ஜோதி தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (03.05.11) |
| 1269. | 12.5.2011 | **புதுச்சேரி மாநிலம்:** புதுச்சேரியை சேர்ந்த டில்லிபாபு. மனைவி சந்திரா(23). டில்லிபாபு வேறு பெண்ணை மணப்பதற்காக சந்திராவை அடித்துத் துன்புறுத்தியதோடு கேபிள் வயரால் சந்திராவின் கழுத்தை இறுக்கி கொலை செய்ய முயற்சி. சந்திரா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (3.5.11) |
| 1270. | 12.5.2011 | **வேலூர் மாவட்டம்:** பெரியபாளையம் அடுத்த பூச்சி அத்திப்பேடு கிருஷ்ணா கால்வாயில் 25 வயதுப் பெண் சடலம் மிதப்பதாக புகார். விசாரணையில் ஊத்துக்கோட்டை ஆரிக்கம்பேடு கிராமத்தைச் சேர்ந்த செல்வி (எ) சரிதா(25). தனது தங்கையின் சாவில் மர்மம் இருப்பதாக சரிதாவின் அண்ணன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (3.5.11) |
| 1271. | 12.5.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** கல்பாக்கம் அடுத்த தென்பட்டினம் குப்பத்தைச் சேர்ந்த வினோத்குமார் மனைவி நதியா(19). திருமணமாகி 4 நாட்களே ஆன நிலையில் நதியா கிணற்றில் பிணமாக கிடந்ததாக புகார். ஆர்டிஓ விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (8.5.11) |
| 1272. | 12.5.2011 | **சென்னை மாவட்டம்:** வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த சாந்தினி(14). அதே பகுதியைச் சேர்ந்த தியாகு(26) திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல் செய்து ஏமாற்றியதாகப் புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கர் (9.5.11) |
| 1273. | 12.5.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு அடுத்த திமிரி அருகே உள்ள கென்னடிபாளையத்தைச் சேர்ந்த தயாளன்(35) மனைவி மீரா(27). அதே பகுதியைச் சேர்ந்த முருகேசன் வயலில் மீராவின் மாடு மேய்ந்ததால் இருவருக்கும் தகராறு. முருகேசன் அவரது மகன் எழுமலை(26), தாய் மாமன் மண்ணு(44), சுரேஷ்(22) ஆகியோர் தன்னைத் தாக்கியதகா மீரா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (9.5.11) |
| 1274. | 12.5.2011 | **சென்னை மாவட்டம்:** திருவான்மியூர் பெரியார் நகர், நரிக்குறவர் காலனியில் வசிப்பவர் ரமேஷ் மனைவி கிருஷ்ணம்மாள்(30). கணவன் மனைவி | பெண்கள் மீதான வன்முறை & கொலை | பாஸ்கர் (9.5.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ரமேஷ் கிருஷ்ணம்மாமளை அடித்துக் கொலை. | | |
| 1275. | 12.5.2011 | **வேலூர் மாவட்டம்:** வந்தவாசி அடுத்த நகரந்தல் கிராமத்தைச் சேர்ந்த லோகநாதன்(30) மனைவி சுமதி(26). இரண்டு பெண் குழந்தை உள்ள நிலையில் 3 வதாகப் பிறந்த பெண் குழந்தையை சுவற்றில் அடித்துக் கொலை செய்ததாக லோகநாதன் மீது புகார். | பெண்சிசுக்கள் மீதான வன்முறை & கொலை | பாஸ்கர் (9.5.11) |
| 1276. | 12.5.2011 | **வேலூர் மாவட்டம்:** ஊத்துக்கோட்டை அருகேயுள்ள பனப்பாக்கத்தைச் சேர்ந்த செல்வி(17). அதே பகுதியைச் சேர்ந்த சீனிவாசன்(22) திருமணம்செய்துக் கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல். புகார். சீனிவாசன் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கர் (12.5.11) |
| 1277. | 12.5.2011 | **வேலூர் மாவட்டம்:** ஊத்துக்கோட்டை வெங்கல் அருகயேுள்ள தேமலானூர் பகுதி கொசஸ்தலை ஆற்றிலிருந்து அனுமிதியன்றி மணல் அள்ளியதாக லாரி பறிமுதல். லாரி டிரைவர் சங்கர் கைது. | மணல் கொள்ளை | பாஸ்கர் (9.5.11) |
| 1278. | 12.5.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** விராலிமலை அருகே மேலசித்தக் குடியிருப்பில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த தங்கராஜ் மனைவி விஜயா(25). அதே பகுதியில் வசிக்கும் ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த அய்யாக்கண்ணு. இருவருக்கும் நடந்த நிலத் தகராறில் ஆத்திரமடைந்த அய்யாக்கண்ணு சாதிபெயரை கூறி இழிவாக பேசியதோடு வீடு புகுந்து விஜயாவை தாக்கியதாகப் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1279. | 12.5.2011 | **மதுரை மாவட்டம்:** பாலமேடு அருகே வெள்ளையம்பட்டியைச் சேர்ந்த திரவியம் மகள் அபிநயா(20) ஆதனூரைச் சேர்ந்த சுரேஷ்(23) வீட்டில் தனியாக இருந்த அபிநயாவை கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 1280. | 12.5.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி திமுக துணைச்செயலாளர் அருணா, கொலை வழக்கில் மதுரை திடீர் நகரைச் சேர்ந்த அசோகன் கைது. மதுரை கோர்ட்டில் சரண்டைந்த அசோகனை காவலர்கள் என் கவுண்டரில் கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் அவருக்கு பாதுகாப்பு அளிக்குபடி அவரது மனைவி மதுரை கோர்ட்டில் மனு தாக்கல். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1281. | 12.5.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, மேற்கு மாம்பலம், கோதண்டராமர்கோவில் தெருவைச் சேர்ந்த ஜெயலட்சுமி(700 காமாட்சி(67). வீட்டில் தனியாக இருந்த இரு சகோதரிகளையும் கழுத்தை நெரித்துக் | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொலை செய்து நகைகளை கொள்ளையடித்துச் சென்றதகா புகார். | | |
| 1282. | 12.5.2011 | **சென்னை மாவட்டம்:** கோவில் பாக்கத்தைச் சேர்ந்த கணபதி மனைவி சரசு(55). அதே பகுதியைச் சேர்ந்த மோகன்(33). இருவருக்கும் நடந்த தகராறில் ஆத்திரமடைந்த மோகன் சரசுவை ஏரியில் மூழ்கடித்துக் கொலை. மோகன் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1283. | 12.5.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் துவரிமான், குருவித்துறை வைகை ஆற்றுப்பகுதியில் மணல் கொள்ளை நடைபெறுவதாக புகார். அதிகாரிகள் சோதனையில் போது சோழவந்தான் வைகை ஆற்றில் அனுமதியின்றி மணல் அள்ளிய ஐந்து மாட்டுவண்டிகள் பறிமுதல். தேனூரில் அனுமதியின்றி மணல் அள்ளிய 2 லாரிகள் பறிமுதல். | மணல் கொள்ளை | தினமலர் |
| 1284. | 12.5.2011 | **பெரம்பலூர் மாவட்டம்:** வேப்பூர் அருகே உள்ள மண்டபம் கிராமத்தைச் சேர்ந்த வாசுதேவன் மகள் சேதுலட்சுமி(21). அதே பகுதியைச் சேர்ந்த சக்திவேல் திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக சக்திவேல் மீது சேதுலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1285. | 12.5.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை டவுன் பகுதியைச் சேர்ந்த மாரியப்பன் மனைவி மகேஸ்வரிக்கும் நரிக்குடி காவல் நிலைய காவலர் ஜெகதீசன் பழக்கம் எற்பட்டது. இதனால் தனது குழந்தைகளின் வாழ்க்கை கேள்விக்குறியாவதாகவும் ஜெகதீசன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாரியப்பன் சூப்பிரண்ட் பிரபாகரனிடம் புகார். விசாரணை நடத்திய சூப்பிரண்ட் ஜெகதீஸ்சை சஸ்பெண்ட் செய்ய உத்தரவு. | காவல் நிலையச் சித்திரவதை & பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 1286. | 12.5.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவாலங்காடு ஒன்றியம் புளியங்குண்டா கிராமத்தல் வசித்த வருபவர் வீராச்சாமி (37) தனது மகனுக்கு சாதி சான்றிதழ் கேட்டு வீரராகபுரம் கிராம நிர்வாக அலுவலர் கோவிந்தசாமியை அணுகினார். அவர் சாதிச் சான்றிதழ் வழங்க ரூபாய் 5 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 1287. | 13.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பொன்மேனியைச் சேர்ந்த கவிதா(17) கலீமா. அதே பகுதியைச் சேர்ந்த அருளானந்தம்(22) சுரேஸ்(22). இருவரும் கவிதா மற்றும் கலீமாவை காதலித்தனர். காதல் | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஜோடிகளை கேரளாவிற்கு கடத்த முயன்ற ரமேஷ்(25) மற்றும் அருளானந்தம், சுரேஷ் கைது. | | |
| 1288. | 13.5.2011 | **மதுரை மாவட்டம்:** ஊமச்சிகுளம் அருகே அலங்காநல்லூர் ரோட்டில் வீரபாண்டி கிராமம் கண்மாய் அருகே பிறந்த பெண் குழந்தை கிடந்ததாக புகார். | பெண்சிசுக்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1289. | 13.5.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல்லைச் சேர்ந்த சின்னச்சாமி மனைவி பத்மாவை அதே பகுதியைச் சேர்ந்த பாலமுருகன் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதகா பத்மா புகார். பாலியல் பலாத்கார முயற்சி வழக்கை அடிதடி வழக்காக மாற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் மோகன் ரூபாய் 50 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக பத்மா புகார். | லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1290. | 13.5.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையை அடுத்த குமாரத்தைச் சேர்ந்த ஒரு பெண் மதுரை மருத்துவமனையில் பிரசவத்திற்கு அனுமதி. அவருக்கு உதவியாக அமுதா என்ற பெண் வந்தார். அமுதாவிடம் 30 வயது பெண் ஒருவர் பிறந்த 10 நாட்களே ஆன பெண் குழந்தையை கொடுத்துவிட்டு கடைக்குச் செல்லவதாக சென்றவர் திரும்பி வரவில்லை என அமுதா புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1291. | 13.5.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை கடையநல்லூரைச் சேர்ந்த ஹமீதாபானு(27)வை அதே பகுதியைச் சேர்ந்த பீர்முகம்மது(40) திருமணம் செய்துக் கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றியதாக ஹமீதாபானு புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1292. | 13.5.2011 | **மதுரை மாவட்டம்:** ராமேஸ்வரத்தைச் சேர்ந்த ராகுல் மனைவி பூபதி(20). தாயார் மேரியின் கண் பரிசோதனைக்காக, ஆறு மாதகுழந்தை ஹரிஹரசுதனுடன் மதுரை வந்தார். குழந்தையை திருடிய ராதா சாப்பாட்டிற்கு வழியில்லாத நிலையில் நெல்லை கடையநல்லூர் அருகே கிணற்றில் வீசி குழந்தையை கொலை செய்ய முயன்றதாக ராதா கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 1293. | 13.5.2011 | **சேலத்தில் மாவட்டம்:** சேலம் கொத்தாம்பாடி ஊராட்சியில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் ஊழல் செய்த வட்டார வளர்ச்சி அதிகாரிகள் உட்பட 11 பேர் பணி நீக்கம். | ஊழல் | தீக்கதிர் |